# சக்கர வியூகம்

தினசரி புலனாய்வு நாளிதழ்

SAKKRA VIYUGAM

www.sakkraviyugam.com | TNTAM/25/A1018 | sakkraviyugam2025@gmail.com

VOLUME : 01 | ISSUE: 193 | 06.1.2026 | TUESDAY | MARGAZHI : 22 | PRICE : RS.5/-

மலர் : 01 | இதழ் : 193 | 06.1.2026 | செவ்வாய்கிழமை | மார்கழி : 22 | விலை : ரூ.5/-



3 திருச்சியில் மோடி பொங்கல் விழா: மத்திய அமைச்சர் அமித்ஷா பங்கேற்பு

4 குஸ்கா தந்தால் கோட்டை உறுதி செல்லப்பாண்டியன் பரபரப்பு பேட்டி

2 திடீர் குழப்பத்தில் திமுக கூட்டணி: எப்படி சமாளிக்கப் போகிறார் ஸ்டாலின்?


# “இசிஜநெட் செயலியை மேம்படுத்த பரிந்துரைக்கலாம்”

## பொது மக்களுக்கு தலைமை தேர்தல் ஆணையம் அழைப்பு

புதுடெல்லி: ஜன.6-

தேர்தல் தொடர்பான 40 செயலிகள் மற்றும் இணையதளங்களை ஒருங்கிணைத்து, ‘இசிஜநெட்’ (ECINet) என்ற பெயரில் புதிய மொபைல் செயலியை தலைமை தேர்தல் ஆணையம் வடிவமைத்துள்ளது.

இது குறித்து தலைமை தேர்தல் ஆணையம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: ”தற்போது இசிஜநெட் செயலியை கூகுள் பிளே ஸ்டோர் மற்றும் ஆப்பிள் ஆப்ஸ்டோரில் பதிவிறக்கம் செய்யலாம். தேர்தல் தொடர்பான அனைத்து செயலிகள் மற்றும் இணைய தளங்களை ஒன்றிணைத்து, ஒரே செயலியில் கொண்டு வரப்பட்டுள்ளது. இந்த செயலி தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரின் ஆலோசனைப் படி வடிவமைக்கப் பட்டுள்ளது. இதை பயன்படுத்துவது மிகவும் எளிதாக்கப்பட்டுள்ளது.

மாநிலங்கள், யூனியன் பிரதேசங்கள், தலைமை தேர்தல் அதிகாரிகள், மாவட்ட தேர்தல் அதிகாரிகள், கண்காணிப்பாளர்கள், மற்ற துறை அதிகாரிகள் அளிக்கும் பரிந்துரைகளை ஆய்வு செய்து தொடர்ந்து ‘இசிஜநெட்’ செயலி மேம்படுத்தப்பட்டு வருகிறது. இப்போது மக்கள் அளிக்கும் பரிந்துரைகளை முழு கவனத்துடன் ஆய்வு செய்து இசிஜநெட் செயலி மேம்படுத்தப்படும். இந்த செயலி இந்த மாத இறுதியில் அதிகாரப்பூர்வமாக வெளியிடப்படும்.

எனவே, நாட்டு மக்கள் அனைவரும் இந்த செயலியை பதிவிறக்கம் செய்து, இதை மேம்படுத்துவதற்கான தங்கள் பரிந்துரைகளை வழங்கலாம். ஜனவரி 10ம் தேதி பொதுமக்கள் தங்கள் பரிந்துரைகளை, ‘சப்மிட் ஏ சஜ்ஜசன்’ என்ற பகுதியை தேர்வு செய்து அனுப்பலாம். இந்த இசிஜநெட் செயலி வாக்காளர்களுக்கு சிறந்து சேவையை வழங்கும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.




## பெரம்பலூர் மாவட்ட அமமுக நிர்வாகிகள் அதிமுகவில் இணைந்தனர்



■ அனைத்துலக எம்ஜிஆர் மன்ற இணைச் செயலாளரும், முன்னாள் எம்பியுமான மருதராஜ் தலைமையில், அமமுக ஒன்றிய செயலாளர் தழுதாழை சேகர், அமுமுக நாகராஜ், கண்ணுச்சாமி, பழனிவேலு, அசோகன், மகேந்திரன், நல்ல நாயகன், முத்தையா உள்ளிட்ட 9 அமமுக நிர்வாகிகள், எடப்பாடி சேலம் முகாம் அலுவலகத்தில் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி முன்னிலையில் அதிமுகவில் இணைந்தனர்.

## குஸ்கா தந்தால் கோட்டை உறுதி


### மது குடிப்போர் விழிப்புணர்வு சங்க மாநில தலைவர் செல்லப்பாண்டியன் பரபரப்பு பேட்டி

சென்னை, ஜன.6-

விஜயை தமிழகத்தில் வீழ்த்த வேண்டும் என்றால் தமிழக அரசு பொங்கலுக்கு குஸ்கா திட்டத்தை அறிமுகப்படுத்த வேண்டும் *

டாஸ்மாக் கடைகளில் குவாட்டருக்கு குஸ்கா வழங்கினால் மட்டுமே விஜய்யை வீழ்த்த முடியும். குழந்தைக்கு உணவு தந்தாய் குடும்பத் தலைவிக்கு ரூ 1000 தந்தாய், குமரிக்கு ரூ 1000 தந்தாய், குமரனுக்கு ஆயிரம் தந்தாய், இந்த குடும்பத்தை உருவாக்கிய 61 விழுக்காடு உள்ள குவாட்டர் பிரியர்களுக்கு என்ன தந்தாய் சொல் என கேட்டு டாஸ்மாக் கடைகளில் குஸ்கா தந்தால் கோட்டை உறுதி என்று தமிழ்நாடு மது குடிப்போர் விழிப்புணர் சங்க மாநிலத் தலைவர் செல்லப்பாண்டியன் தெரிவித்துள்ளார்.






## தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 30 ஆயிரம் பேருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பேட்டி

### திண்டுக்கல் மாவட்டத்தில் 1500 கோடி மதிப்பில் அமைந்த முடிவுற்ற நலத்திட்டங்களை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைக்கிறார்



சின்னாளபட்டி, ஜன.6

திண்டுக்கல் மாவட்டத்திற்கு ஜனவரி 7 அன்று வருகை தரும் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை வரவேற்க திண்டுக்கல் கிழக்கு மற்றும் மேற்கு மாவட்ட திமுக சார்பாக பல்வேறு சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது. மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே அமைக்கப்பட்டுள்ள பிரமாண்டமான மேடையில் சுமார் 30 ஆயிரம் பேருக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை தமிழக முதல்வர் வழங்குகிறார். இதுதவிர ஆத்தூர் தொகுதிக்கு உட்பட்ட ஆத்தூர் ஒன்றியத்தில் தமிழகத்திலேயே வேறு எந்த மாவட்டத்திலும் அமையாத பிரமாண்டமான கூட்டுறவு கலை மற்றும் அறிவியல் கல்லூரியையும், ரெட்டியார்சத்திரம் ஒன்றியத்தில் அமைக்கப் பட்ட அரசு கல்லூரியையும் இதுதவிர மற்ற தொகுதிகளில் அமைந்துள்ள கல்லூரிகளையும் திறந்து வைப்பதோடு, புதிய அறிவிப்புகளை வெளியிடுகிறார். விழா மேடையை பார்வையிட வந்த திமுக மாநில துணைப் பொதுச் செயலாளரும், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சருமான ஐ.பெரியசாமி அவர்கள் நிருபர்கள் மத்தியில் பேசும்போது வரும் 7ம் தேதி தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விழாவில் கலந்து கொண்டு 30 ஆயிரம் பேருக்கு நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார். அதனுடன் சேர்ந்து அடிக்கல் நாட்டுவிழா மற்றும் முடிவுற்ற நலத்திட்ட பணிகள் சுமார் ரூ. 1500 கோடிக்கான நலத்திட்டங்களை தொடங்கி வைக்கிறார். பாண்டியராஜபுரத்திலிருந்து திண்டுக்கல் விழா மேடை வரை அந்தந்த பகுதியைச் சேர்ந்த திமுக தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளிக்கின்றனர். விழா மேடையில் 1 லட்சம் பட்டாக்களை தமிழக முதல்வர் வழங்கி மகத்தான சாதனை படைக்க உள்ளார். இதுதவிர தமிழக முதல்வரும் பல புதிய திட்டங்களையும் அறிவிக்க உள்ளார். தமிழக அரசியல் சூழ்நிலையைப் பற்றி மத்திய அமைச்சர் அமித்ஷாவிற்கு ஒன்றும் தெரியாது. பாரதிய ஜனதா கட்சி, அதிமுக உட்பட எத்தனை கட்சிகளுடன் கூட்டணி வைத்தாலும், 2026 சட்டமன்ற தேர்தலில் திமுக கூட்டணிதான் அமோக வெற்றி பெறும். கைப்புண்ணுக்கு கண்ணாடி தேவையில்லை. மக்கள் மனதில் குறிப்பாக பெண்கள் மத்தியில் திமுகதான் மீண்டும் ஆட்சிக்கு வர வேண்டும் என நினைத்துவிட்டார்கள். இரண்டாவது முறையாக மு.க. ஸ்டாலின் அவர்கள் முதல்வராக பொறுப்பேற்பார். எதிர்கட்சிகளால் இன்னும் கூட்டணியே அமைக்க முடியவில்லை. பிறகு எப்படி இவர்கள் வெற்றிபெறுவோம் என பேசுகிறார்கள். பழைய ஓய்வு திட்டத்தை முதலமைச்சர் அறிவித்ததன் மூலம் லட்சக்கணக்கான குடும்பங்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். தேர்தலுக்காக அறிவிக்கவில்லை. அரசு ஊழியர்கள் நலன் கருதிதான் இந்த ஓய்வூதி திட்டத்தை அறிவித்துள்ளார்.

நிகழ்ச்சியின்போது திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் ச.சரவணன், திட்ட இயக்குநர் பெ.திலகவதி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பிரதீப்குமார், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ஜெகவீரபாண்டியன், உதவி மக்கள் தொடர்பு அலுவலர் இளையேந்திரன், ஒன்றிய செயலாளர்கள் திண்டுக்கல் நெடுஞ்செழியன், பிள்ளையார்நத்தம் முருகேசன், பாறைப்பட்டி ராமன், சட்டமன்ற உறுப்பினர் முகாம் அலுவலக அலுவலர் வடிவேல் முருகன், வட்டார வளர்ச்சி அலுவலர் மகுடபதி, அகரம் பேரூராட்சி மன்ற தலைவர் நந்தகோபால், திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லை சுபாஷ், திமுக நிர்வாகி அம்பை ரவி, முன்னாள் மாமன்ற உறுப்பினர் மார்;கெட் சக்திவேல் உட்பட திமுக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.


தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில்
YAMAHA SHOWROOM
தமிழர் தைத்திருநாளை முன்னிட்டு
குறிப்பிட்ட மாடல்களுக்கு மட்டும்
₹ 10,000
SPECIAL OFFER



ஸ்ரீ கோமதி ஆட்டோ ஏஜென்சிஸ்
197-B,மெயின் ரோடு, சங்கரன்கோவில்
99442 14004
விளம்பரம் மற்றும் செய்திகள்
தொடர்புக்கு : 88705 00000




# பள்ளிகள் திறந்தாலும் போராட்டம் தொடரும்: இடைநிலை ஆசிரியர்கள் திட்டவட்டம்

சென்னை, ஜன.6-

அரையாண்டு விடுமுறை முடிந்து பள்ளிகள் ) திறக்கப்படும் நிலையில், கோரிக்கை நிறைவேறும் வரை போராட்டம் தொடரும் என்று இடைநிலை ஆசிரியர்கள் அறிவித்துள்ளனர்.

சம வேலைக்கு சம ஊதியம் கோரிக்கையை முன்வைத்து இடைநிலை பதிவு மூப்பு ஆசிரியர் இயக்கம் (எஸ்எஸ்டிஏ) சார்பில் தொடர்ந்து போராட்டம் நடைபெற்று வருகிறது. 10வது நாளாக ஆசிரியர்கள் தங்கள் குடும்பத்தினருடன் சென்னை சிவானந்தா சாலையில் மனித சங்கிலி போராட்டத்தில் நேற்று ஈடுபட்டனர்.

அரையாண்டு விடுமுறை முடிந்து பள்ளிகள் இன்று திறக்கப்படவுள்ள நிலையில், கோரிக்கை நிறைவேறும் வரைபோராட்டம் தொடரும் என ஆசிரியர்கள் தெரிவித்துள்ளனர். இதுகுறித்து எஸ்எஸ்டிஏ பொதுச்செயலாளர் ஜே.ராபர்ட் கூறும்போது, ''எங்கள் கோரிக்கை நிறைவேற்றப்படும் வரை போராட்டம் தொடரும். பள்ளிகள் இன்று திறந்தாலும் பின்வாங்கும் எண்ணமில்லை. மாறாக மாவட்டத் தலைநகரங்களிலும் இன்று முதல் போராட்டங்களை நடத்த இருக்கிறோம். எங்களுக்கு ஆதரவாக பெற்றோர்களும் போராட்டத்துக்கு வருவார்கள். எனவே,தமிழக அரசு எங்களை அழைத்துப் பேசி கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும்.

ஓய்வூதியத்தில் முரண்பாடு: முதல்வர் அறிவித்துள்ள புதிய ஓய்வூதியத் திட்டத்தை நன்றியுடன் வரவேற்கிறோம். ஆனால், எங்களுக்கு அடிப்படை ஊதியத்திலேயே முரண்பாடு உள்ளதால் ஓய்வூதியத்தில் முரண்பாடு இருக்கும். எனவே அடிப்படை ஊதியத்தை முறையாக உயர்த்த வேண்டும்'' என்றார்.

திருமாவளவன் வலியுறுத்தல்: இடைநிலை ஆசிரியர்கள் போராட்டம் குறித்து, விசிக தலைவர் திருமாவளவன், செய்தியாளர்களிடம் நேற்று கூறும்போது, ''இடைநிலை ஆசிரியர்களின் ஊதிய முரண்பாடுகளைக்களைந்து, நிலுவைத் தொகையை வழங்க அரசு முன்வர வேண்டும். அதேபோல், தூய்மைப் பணியாளர்களை தனியாரிடம் ஒப்படைக்காமல் அரசு பணியிலேயே நீடிக்கச் செய்ய வேண்டும்.

பெரியாரின் அரசியல் என்பது தன்னலமற்ற அரசியல். பெரியாரை வீழ்த்த நினைக்கும் சக்திகளின் நோக்கம் நிறைவேற சீமானின் அரசியல் ஏதுவாக அமைந்து விடக்கூடாது. விசிகபேசுவது பெரியாரின் அரசியலைத்தான், விளிம்புநிலை மக்களின் முன்னேற்றத்துக்கான அடித்தளம் பெரியாரிய அரசியலே'' என்று கூறினார்.

# திடீர் குழப்பத்தில் திமுக கூட்டணி: எப்படி சமாளிக்கப் போகிறார் ஸ்டாலின்?



"திருச்சி, ஜன.6-

எத்தனை எதிரிகள் வந்தாலும் எங்களை அசைத்துப் பார்க்கமுடியாது'' எனச் சொல்லிக் கொண்டே இருந்த திமுக கூட்டணியின் மீது கண் பட்டுவிட்டது போலிருக்கிறது. உள்ளே இருக்கும் கட்சிகள் ஒன்றுக்கு ஒன்று முரண்பாடான கருத்துகளை பேச ஆரம்பித்திருப்பதால் கூட்டணிக்குள் சலனப் புயல் வீச ஆரம்பித்திருக்கிறது.

கடந்த 2ம் தேதி திருச்சியில் இருந்து சமத்துவ நடைபயணம் தொடங்கினார் மதிமுக பொதுச்செயலாளர் வைகோ. இந்த நிகழ்வில் முதல்வர் ஸ்டாலின் உள்ளிட்ட கூட்டணிக் கட்சி தலைவர்கள் அனைவரும் ஆஜராகி இருந்த நிலையில், காங்கிரஸ் புறக்கணித்து விட்டது. விழாவுக்கான அழைப்பிதழில் பிரபாகரன் படம் அச்சாகி இருந்ததே அதற்குக் காரணம் எனச் சொல்கிறது காங்கிரஸ்.

இதுகுறித்து துரை வைகோ தன்னிலை விளக்கம் தந்த பிறகும் சமாதானம் அடையவில்லை காங்கிரஸ். இது இரண்டு கட்சியினருக்குக்குள்ளும் மனஸ்தாபத்தை ஏற்படுத்தி இருக்கிறது.

இதற்கு முன்பு, "கடன் வாங்கியதில் உபியை மிஞ்சிவிட்டது தமிழ்நாடு" என்று காங்கிரஸ் கட்சியின் பிரவீன் சக்கரவர்த்தி கொளுத்திப் போட்ட நெருப்புக்கு கம்யூனிஸ்ட்கள், விசிக, மதிமுக உள்ளிட்ட அனைவரும் ஒருசேர கண்டனம் தெரிவித்தனர். இதற்கு காங்கிரஸ் தரப்பில் இருந்து பதிலடி கொடுத்த மாணிக்கம் தாகூர், ''காங்கிரஸ் தனது உட்கட்சி விவகாரங்களை எப்படி நடத்த வேண்டும் என்று கூட்டணி கட்சிகள் உத்தரவிடத் தொடங்கியது எப்போது? கூட்டணிகள் பரஸ்பர மரியாதையின் அடிப்படையில் உருவாகின்றன; பொது அழுத்த அரசியலால் அல்ல. துரை வைகோவும், திருமாவளவனும் கூட்டணி கட்சிகள் சம்பந்தப்பட்ட விஷயங்களில் லட்சுமண ரேகையை மதிக்க வேண்டும் என தங்களின் நிர்வாகிகளுக்கு வழிகாட்ட வேண்டும்'' என்று சூடானது ஒட்டுமொத்த கூட்டணிக்குள்ளும் சலசலப்பை உண்டாக்கியது.

இதேபோல், ''கடந்த 2011ம் ஆண்டு போல் விசிகவும் பாமகவும் ஒரே கூட்டணியில் இருக்கவேண்டும்'' என தனது அபிப்பிராயத்தைச் சொன்னார் காங்கிரஸ் கட்சி தலைவர் செல்வப்பெருந்தகை. இதற்கு கடுமையாக் எதிர்வினையாற்றிய விசிக துணைப் பொதுச்செயலாளர் வன்னி அரசு, "விசிகவுக்கு தலைவர் செல்வப்பெருந்தகை இல்லை. விசிக குறித்து பேச அவருக்கு தார்மிக உரிமையும் இல்லை. பாஜக, பாமக இருக்கும் கூட்டணியில் நாங்கள் இருக்க மாட்டோம் என விசிக தலைவர் தெளிவாக கூறிவிட்ட நிலையில், பாமகவுடன் சேருங்கள் எனச் சொல்வது செல்வப்பெருந்தகையின் வேலையல்ல.

பாஜகவும், காங்கிரஸூம் சேரவேண்டும் என நாங்கள் சொன்னால் அவர் ஏற்றுக் கொள்வாரா?'' என்று காட்டமான கேள்வியை முன்வைத்தார்.

கூட்டணிக் கட்சிகளுக்குள் மட்டுமல்லாது காங்கிரஸ் கட்சிக் குள்ளேயே, விஜய்யுடன் போகலாம் என்று ஒரு அணியும், திமுகவுடனேயே இருந்துவிடலாம் என ஒரு அணியும் கிளம்பி இருப்பதால் குழப்பமான சூழல் நிலவிவருகிறது. இப்படியே போனால், காங்கிரஸ் இன்னொரு பிளவை சந்தித்தாலும் ஆச்சரியமில்லை என்று சொல்லுமளவுக்கு இருக்கிறது அந்தக் கட்சியின் உள்வட்ட நிலவரம்.

இந்த நிலையில் ஒருவேளை பாமக உள்ளே வந்தால் அவர்களுக்கான இடங்களை பிரித்துக் கொடுப்பதிலும் திமுகவுக்கு பெரும் தலையிடி காத்திருக்கிறது. இத்தனைக்கும் மத்தியில் புதிய கட்சிகளை கூட்டணிக்குள் கொண்டு வந்து அவர்களுக்கும் தொகுதிகளைப் பங்கிட்டுத் தரவேண்டிய பொறுப்பும் இருப்பதால் தொகுதிப் பங்கீடுகளை சுமுகமாக பேசி முடித்தாலே 'அப்பாடா' நிம்மதி தான் திமுகவுக்கு!

# திருப்பரங்குன்றம் விவகாரம்: நாளை வெளியாகிறது தீர்ப்பு



மதுரை, ஜன.6-

திருப்பரங்குன்றம் மலை உச்சியில் தீபத்தூணில் கார்த்திகை தீபம் ஏற்ற வேண்டும் என்ற உயர்நீதிமன்ற மதுரைக்கிளை தனி நீதிபதியின் உத்தரவுக்கு எதிராக தொடரப்பட்ட மேல்முறையீட்டு மனுக்கள் மீது நாளை தீர்ப்பு வழங்கப்பட உள்ளது.

மதுரை மாவட்டம் எழுமலை ராம ரவிக்குமார், 'திருப்பரங்குன்றம் மலை உச்சியிலுள்ள தீபத் துபணில் (தர்காவிலிருந்து 15 மீ., தொலைவில்) கார்த்திகை தீபம் ஏற்ற சுப்பிரமணிய சுவாமி கோயில் நிர்வாகத்திற்கு உத்தரவிட வேண்டும்,' என உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் மனு செய்தார். இதுபோல் பரமசிவம், அரசுபாண்டி, கார்த்திகேயன் மனு செய்தனர். இவற்றை டிச.1ல் அனுமதித்த நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன், 'வழக்கமான இடங்களைத் தவிர, தீபத்துபணிலும் கார்த்திகை தீபத்தை கோவில் நிர்வாகம் ஏற்ற வேண்டும்,' என உத்தரவிட்டார்.

இதனை எதிர்த்து தமிழக அரசு சார்பில், கோயில் நிர்வாகம் சார்பில் மேலமுறையீடு செய்யப்பட்டது. இம்மனுக்கள் நீதிபதிகள் ஜி.ஜெயச்சந்திரன், கே.கே.ராமகிருஷ்ணன் அமர்வு விசாரித்து வந்தது. விசாரணை முடிந்த நிலையில் தீர்ப்பு ஒத்திவைக்கப்பட்டது. இந்நிலையில், இந்த வழக்கில் நீதிபதிகள் நாளை தீர்ப்பு வழங்க உள்ளனர்.

இதனிடையே, 'மதுரை திருப்பரங்குன்றம் மலையில் கந்துபரி விழா நடத்த தடை கோரிய வழக்கில் சந்தனக்கூடு உருஸ் திருவிழாவை மட்டும் தர்கா நிர்வாகம் நடத்த வேண்டும். விழாவில் 50 பேர் மட்டுமே பங்கேற்க வேண்டும். விலங்குகளை பலியிடக்கூடாது. விலங்கு இறைச்சியை எடுத்துச் செல்லக்கூடாது. அசைவ உணவு சமைக்கக்கூடாது. எந்தவொரு அசைவ உணவையும் எடுத்துச் செல்லக்கூடாது. இந்த உத்தரவை மலையின் அடிவாரம் முதல் உச்சிவரை சம்பந்தப்பட்ட அரசு அதிகாரிகள் கண்டிப்புடன் அமல்படுத்த வேண்டும்.,' என, உயர்நீதிமன்ற மதுரைக் கிளை உத்தரவிட்டது.

இந்நிலையில், 50 பேர் மட்டுமே பங்கேற்க வேண்டும் என்ற கட்டுப்பாட்டை நீக்க தாக்கல் செய்யும் மேல்முறையீட்டு மனுவை அவசர வழக்காக விசாரிக்க வேண்டும் என உயர்நீதிமன்ற மதுரைக்கிளையில் தர்கா நிர்வாகம் முறையிட்டது. இதை இன்று விசாரணைக்கு ஏற்க மறுத்த நீதிமன்றம்,இந்த விவகாரம் குறித்து தீபத்தூண் வழக்கில் விவாதிக்கப்படும் எனவும், தர்கா நிர்வாகம் மனு நாளை விசாரிக்கப்படும் என்றனர்.





# டில்லி கலவர வழக்கு: சர்ஜில் இமாம், உமர் காலித்துக்கு சுப்ரீம் கோர்ட் ஜாமின் மறுப்பு

புதுடில்லி, ஜன.6-

2020ம் ஆண்டு டில்லி கலவர வழக்கில் கைதாகி சிறையில் உள்ள உமர் காலித் மற்றும் சர்ஜில் இமாம் ஆகியோருக்கு சுப்ரீம்கோர்ட் ஜாமின் வழங்க மறுப்பு தெரிவித்தது.

குடியுரிமை திருத்த சட்டத்துக்கு (சிஏஏ) எதிர்ப்பு தெரிவித்து , டில்லியில் கடந்த 2020ம் ஆண்டு பிப்ரவரியில் நடந்த போராட்டத்தில் வன்முறை வெடித்தது. இந்த கலவரத்தில் 53 பேர் உயிரிழந்தனர். 700க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர்.

இந்த கலவர வழக்கில் ஜேஎன்யு முன்னாள் மாணவர்கள் ஷர்ஜீல் இமாம், உமர் காலித் உள்பட 15 பேர் உபா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். அவர்களுக்கு ஜாமின் வழங்க வேண்டும் எனக்கூறி பல்வேறு மனுக்கள் சுப்ரீம்கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டன. இதனை விசாரித்த நீதிபதிகள் அரவிந்த் குமார் மற்றும் என்.வி.அஞ்சாரியா ஆகியோர் அடங்கிய அமர்வு (ஜனவரி 05) தீர்ப்பு அளித்தது.

நீதிபதிகள் தங்களது தீர்ப்பில், ' உமர் காலித் மற்றும் சர்ஜில் இமாம் ஆகியோருக்கு ஜாமின் வழங்க முடியாது. இருவரும் ஐந்தாண்டுகளுக்கு மேலாக தொடர்ந்து சிறையிலேயே இருந்து வருகின்றனர். இவர்கள் ஓராண்டுக்கு பிறகு மீண்டும் ஜாமின் கோரி மனுத்தாக்கல் செய்யலாம்' என தெரிவித்தனர். இந்த வழக்கில் விசாரணையை தீவிரப்படுத்த வேண்டும் எனவும் உத்தரவிட்டனர்.

அதேநேரத்தில் வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட குல்பிஷா பாத்திமா, மீரா ஹைதர், ஷிபா உர் ரஹ்மான், முகமது சலீம் கான் மற்றும் ஷதாப் அகமது ஆகியோருக்கு மட்டும் நீதிபதிகள் ஜாமின் வழங்கினர்

# மிரட்டலை நிறுத்துங்கள்: டிரம்ப்புக்கு டென்மார்க் பிரதமர் பதிலடி

வாஷிங்டன், ஜன.6-

கிரீன்லாந்தை எடுத்துக் கொள்வோம் என மிரட்டுவதை அமெரிக்க அதிபர் டிரம்ப் நிறுத்த வேண்டும் என டென்மார்க் பிரதமர் மெட்டே பிரெடிரிக்சன் கூறியுள்ளார்.

அமெரிக்கா ராணுவ நடவடிக்கை மூலம் வெனிசுலா அதிபர் நிக்கோலஸ் மதுரோ மற்றும் அவரது மனைவியை கைது செய்து நாடு கடத்தி நியூயார்க் சிறையில் அடைத்துள்ளது. இந்நிலையில், டிரம்ப்புக்கு மிகவும் நெருக்கமான, ஸ்டீபன் மில்லர் என்பவரின் மனைவி காதே மில்லர், சமூக ஊடகத்தில் கிரீன்லாந்து வரைபடத்தை அமெரிக்க கொடியுடன் வெளியிட்டு, அடுத்து விரைவில் எனக்கூறியிருந்தார்.

இது தொடர்பாக டென்மார்க் பிரதமர் கேத்தே பிரெட்ரிக்சன் வெளியிட்ட அறிக்கையில் கூறியுள்ளதாவது: அமெரிக்காவிடம் நேரடியாக சொல்லிக் கொள்கிறேன். கிரீன்லாந்து உடன் இணைந்து டென்மார்க் நேட்டோவில் உறுப்பு நாடாக உள்ளது. அந்த அமைப்பின் பாதுகாப்பு உத்தரவாதத்தை பெற்றுள்ளது. கிரீன்லாந்து தொடர்பாக அமெரிக்காவுடன் ஒப்பந்தம் போட்டுள்ளோம்.

எனவே வரலாற்று ரீதியாக நெருங்கிய நட்புநாடான ஒரு நாட்டிற்கும், தங்களை விலைபேச முடியாது என்று மிகத் தெளிவாகக் கூறியுள்ள மற்றொரு நாட்டிற்கும், அதன் மக்களுக்கும் எதிரான அச்சுறுத்தல்களை நிறுத்துமாறு அமெரிக்காவை நான் வலியுறுத்துகிறேன். இவ்வாறு அந்த அறிக்கையில் அவர் கூறியுள்ளார்.

கிரீன்லாந்து என்பது டென்மார்க் கட்டுப்பாட்டில் உள்ளது. இதனை பாதுகாப்பு காரணங்களுக்காக தங்களிடம் ஒப்படைக்க வேண்டும் என அமெரிக்க அதிபர் டிரம்ப் வலியுறுத்தி உள்ளார். ஆனால், அதனை ஒப்படைக்க முடியாது என டென்மார்க் திட்டவட்டமாக கூறிவிட்டது. இருப்பினும் அந்த தீவை தொடர்ந்து அமெரிக்கா கோரி வருகிறது.

டென்மார்க் பிரதமர் பேட்டியைத் தொடர்ந்து சில மணி நேரங்களுக்கு பிறகு டிரம்ப் கூறுகையில், தேசிய பாதுகாப்பு கண்ணோட்டத்தில் கிரீன்லாந்து நமக்கு தேவைப்படுகிறது. ஆனால், டென்மார்க்கால் அதனை செய்ய முடியாது எனக்கூறினார்.

# தென்காசி சிவகிரியில் நலம் காக்கும் ஸ்டாலின் முகாம்



சிவகிரி. ஜன.6

சிவகிரி சேனைத்தலைவர் மேல்நிலைப்பள்ளியில் தமிழ்நாடு அரசு பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாம் நடைபெற்றது. முகாமிற்கு தென்காசி வடக்கு மாவட்ட திமுக செயலாளரும், சங்கரன்கோவில் தொகுதி எம்எல்ஏ வுமான ராஜா ஈஸ்வரன், தென்காசி பாராளுமன்ற தொகுதி உறுப்பினர் ராணி ஸ்ரீகுமார் ஆகியோர் தலைமை தாங்கினர். வாசுதேவநல்லூர் தொகுதி எம்எல்ஏ டாக்டர் சதன்திருமலைக்குமார், வாசுதேவநல்லூர் யூனியன் சேர்மனும் வடக்கு ஒன்றிய திமுக செயலாளருமான பொன் முத்தையா பாண்டியன், தலைமை செயற்குழு உறுப்பினர் யுஎஸ்டி சீனிவாசன், வாசுதேவநல்லூர் தொகுதி பொறுப்பாளரும், தென்காசி வடக்கு மாவட்ட துணைச் செயலாளருமான மனோகரன், மாநில மருத்துவ அணி துணைச்செயலாளர் டாக்டர் செண்பகவிநாயகம், சிவகிரி பேரூராட்சி தலைவர் கோமதிசங்கரி சுந்தரவடிவேலு, செயல் அலுவலர் வெங்கடகோபு, துணைத்தலைவர் லட்சுமிராமன், மாவட்ட சுகாதார அலுவலர் கோவிந்தன், இணை இயக்குனர் பிரேமலதா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

முகாமில் வட்டார வட்டார மருத்துவ ர மருத்து அலுவலர் டாக்டர் ராதிகா, வட்டார சுகாதார மேற்பார்வையாளர் முகைதீன், அப்துல் காதர், வாசுதேவநல்லூர் ஆரம்ப சுகாதார நிலைய சுகாதார ஆய்வாளர் சுகுமார், தேவிபட்டணம் சுகாதார ஆய்வாளர் சீனிவாசன், டாக்டர்கள் லியோ, இசக்கி, சிவகிரி சேனைத்தலைவர் மகாஜன சங்க தலைவர் கணேசன், பள்ளி செயலாளர் லெனின், துணைத்தலைவர், பொருளாளர் பழனிச்சாமி, முன்னாள் நிர்வாகிகள், தலைமை ஆசிரியர் சக்திவேலு, உதவி தலைமை ஆசிரியர் இசக்கிமுத்து மை ஆசிரியர் இசக்கிமுத்து, வக்கீல் பொன்ராஜ், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் மாடசாமி, மாவட்ட மருத்துவர் அணி துணைச் செயலாளர் டாக்டர் மணிகண்டன், ஜோதி மணிகண்டன், பேரூர் செயலாளர்கள் குருசாமி, சேது சுப்பிரமணியன், ரூபி பாலசுப்பிரமணியன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# குடிநீரில் கழிவுநீர் கலந்த விவகாரம்: இந்தூரில் புதிதாக 20 பேருக்கு வயிற்றுப்போக்கு



இந்தூர். ஜன.6-

மத்தியப் பிரதேசத்தின் இந்தூரில் கழிவுநீர் கலந்த குடிநீரை குடித்ததால் நூற்றுக்கணக்கானோர் பாதிக்கப்பட்ட நிலையில், புதிதாக மேலும் 20 பேர் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தூர் மாநகரின் பகீரத்புரா பகுதியில் கழிவுநீர் கலந்த குடிநீரைக் குடித்ததால் நூற்றுக்கணக்கானோர் பாதிக்கப்பட்டனர். இதையடுத்து, அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் குறித்து தெரிவித்த அதிகாரிகள், ''பகீரத்புரா பகுதியில் அசுத்தமான குடிநீரை குடித்ததால் வயிற்றுப்போக்கு ஏற்பட்டு 398 பேர் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் 256 பேர் குணமடைந்து வீடு திரும்பினர். 142 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களில் 11 பேர் தீவிர சிகிச்சைப் பிரவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதுவரை 6 பேர் உயிரிழந்துள்ளனர்.

நோய்த்தொற்று ஏற்பட்ட பகிரத்புராவில் சுகாதார ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 2,354 குடும்பங்களைச் சேர்ந்த 9,416 பேர் பரிசோதிக்கப்பட்டதில், அவர்களில் 20 பேருக்கு நோய்த்தொற்று இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. நோய் பரவல் தற்போது கட்டுக்குள் உள்ளது'' என தெரிவித்தார்.

மாவட்ட நிர்வாகம் 6 பேர் உயிரிழந்திருப்பதாக கூறி வரும் நிலையில், இந்தூர் மேயர் புஷ்யமித்ரா பார்கவா 10 பேர் உயிரிழந்திருப்பதாகத் தெரிவித்துள்ளார். உள்ளூர் மக்களோ 16 பேர் உயிரிழந்திருப்பதாகக் கூறுகின்றனர்.

இந்த சம்பவம் தொடர்பாக செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு இந்தூரைச் சேர்ந்த மாநில அமைச்சர் விஜய்வர்க்கியா, முட்டாள்தனமாக கேள்வி கேட்கக்கூடாது எனக் கூறியது சர்ச்சையை ஏற்படுத்தி உள்ளது.

இந்த சம்பவம் தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசிய மாநில காங்கிரஸ் தலைவர் ஜிது பட்வாரி, ''அசுத்தமான குடிநீர் விநியோகம் காரணமாக 16 பேர் உயிரிழந்துள்ளனர். இந்த மரணங்கள் குறித்து நீதி விசாரணை நடத்தப்பட வேண்டும். குற்றவாளிகளுக்கு கடுமையான தண்டனை விதிக்கப்பட வேண்டும்.

குடிநீர் குழாய்களில் அசுத்தமான நீர் வருவதாக பகீரத்புரா மக்கள் கடந்த 8 மாதங்களாக புகார் கூறி வருகின்றனர். ஆனால், எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இது குறித்து கேள்வி எழுப்பிய செய்தியாளர்களை மாநில அமைச்சர் அநாகரிகமாகப் பேசி இருக்கிறார். அவர் தனது பதவியை ராஜினாமா செய்ய வேண்டும். இல்லாவிட்டால் முதல்வர் அவரை பதவி நீக்கம் செய்ய வேண்டும். காங்கிரஸ் கட்சியின் இந்த கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால் வரும் 11ம் தேதி போராட்டம் நடத்தப்படும்'' என தெரிவித்துள்ளார்.

இதனிடையே, குடிநீர் தொற்று குறித்து ஆய்வு செய்ய கொல்கத்தாவைச் சேர்ந்த தேசிய பாக்டீரியா தொற்று ஆராய்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த குழுவினர் இந்தூருக்கு வந்துள்ளனர். அவர்கள், நோய்ப்பரவலைக் கட்டுப்படுத்த சுகாதாரத்துறைக்கு தொழில்நுட்ப ஆதரவை வழங்குவார்கள் என்று மத்தியப் பிரதேச சுகாதார அதிகாரி மாதவ் பிரசாத் ஹாசானி தெரிவித்துள்ளார்.



# திருச்சியில் மோடி பொங்கல் விழா: மத்திய அமைச்சர் அமித்ஷா பங்கேற்பு

திருச்சி, ஜன.6-

திருச்சியில் பாஜ சார்பில் நடந்த மோடி பொங்கல் விழாவில் மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா பங்கேற்றார்.

தமிழகம் வந்துள்ள மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா திருச்சி மன்னார்புரத்தில் நடந்த மோடி பொங்கல் விழாவில் கலந்து கொண்டார். அவருக்கு பரிவட்டம் கட்டி உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

1008 பானைகளில் பெண்கள் பொங்கல் வைத்து மகிழ்ந்தனர். பாரம்பரிய உடையில் அமித்ஷா வேட்டி, சட்டை அணிந்து இருந்தார். இந்த பொங்கல் விழாவில் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

சுவாமி தரிசனம்

முன்னதாக, திருச்சி மாவட்டத்தில் உள்ள திருவானைக்காவல் ஜம்புகேசுவரர் கோவில் மற்றும் ஸ்ரீரங்கம் ரங்கநாதர் கோவிலில் அமித்ஷா சுவாமி தரிசனம் செய்தார்.

மத்திய அமைச்சர்கள் பியூஷ் கோயல், அர்ஜுன் ராம் மேக்வால், முரளிதர் மோஹோல், இணை அமைச்சர் முருகன் ஆகியோரும் உடனிருந்தனர்.

கோவிலுக்கு சென்ற போது, அங்கு திரண்டிருந்த மக்களுடன் அவர் கை குலுக்கினார். மத்திய அமைச்சர்களின் வருகையையொட்டி, திருச்சியில் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டது.

# சமுத்திர பிரதாப் கப்பல் இந்தியாவின் தன்னம்பிக்கையை அதிகரிக்கும்: ராஜ்நாத் சிங்




பனாஜி, ஜன.6-

கோவா கப்பல் கட்டும் தளத்தில் சமுத்திர பிரதாப் கப்பலை மத்திய பாதுகாப்பு துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் நாட்டுக்கு அர்ப்பணித்தார். அவர் இந்த கப்பல் இந்தியாவின் தன்னம்பிக்கையை அதிகரிக்கும் என பேசுகையில் தெரிவித்தார்.

இரண்டு மாசு கட்டுப்பாட்டு கப்பல்களில் முதலாவதாக சமுத்திர பிரதாப் கப்பலை, மத்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங், கோவா கப்பல் கட்டும் தளத்தில் நடந்த நிகழ்ச்சியில் இன்று (ஜனவரி 05) மத்திய பாதுகாப்பு துறை அமைச்சர் ராஜ்நாத் அர்ப்பணித்தார். இந்திய கடலோர காவல்படைக்காக உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட முதல் மாசு கட்டுப்பாட்டு கப்பல் தான் சமுத்திரா பிரதாப்.

இந்த கப்பலில் பயன்படுத்தப்பட்ட பொருட்களில் 60 சதவீதம் உள்நாட்டை சேர்ந்தவை. இந்த கப்பல் 114. 5 மீட்டர் நீளம், 4,200டன் எடை கொண்டது. 6 ஆயிரம் கடல் மைல் தூரம் வரை செல்லக்கூடியது. இக்கப்பலில் ரசாயன கண்டுபிடிப்பு கருவிகள், தீயணைப்பு கருவிகள் மற்றும் மாசுவை அகற்றும் இதர சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

நிகழ்ச்சியில் ராஜ்நாத் சிங் பேசியதாவது: தொலை நோக்கு பார்வையுடன் இந்திய கடற்படையில் சமுத்தர பிரதாப் கப்பல் இணைக்கப்பட்டு உள்ளது. கடல் வளங்கள் எந்த ஒரு நாட்டிற்கும் சொந்தமானது அல்ல. கடலோர காவல் படையில் பெண்களுக்கு முன்னுரிமை அளித்து அதிகாரம் அளித்ததில் நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். இது எங்களுக்கு பெருமை சேர்க்கும் விஷயமாகும். சமுத்திர பிரதாப் கப்பல் இந்தியாவின் தன்னம்பிக்கையை அதிகரிக்கும்.

இந்த கப்பலை இயக்குவது நமது வலிமையை அதிகரிக்கும். இந்த கப்பல் நமது கூட்டு முயற்சியின் அடையாளம். மாசு கட்டுப்பாட்டை மையமாக கொண்டு வடிவமைக்கப்பட்டு இருக்கிறது. இது இன்றைய சவால்களை எதிர்கொள்ள மிகவும் அவசியம். இவ்வாறு ராஜ்நாத் சிங் பேசினார். நிகழ்ச்சியில் கோவா முதல்வர் பிரமோத் சாவந்த், மத்திய பாதுகாப்பு செயலாளர் ராஜேஷ் குமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# த.வெ.க., கூட்டணியில் அ.ம.மு.க., இணைவது உறுதி: செங்கோட்டையன் திட்டவட்டம்



கோவை, ஜன.6-

"இரு கட்சிகளும் வேண்டாம், புதிய முகம் வேண்டும் என்பது இளைஞர்கள் எதிர்பார்ப்பாக உள்ளது," என, த.வெ.க., நிர்வாக குழு தலைமை ஒருங்கிணைப்பாளர் செங்கோட்டையன் தெரிவித்தார்.

கோவையில் நேற்று அவர் அளித்த பேட்டி: ஒன்றரை மாதத்துக்கு முன், துணை முதல்வர் உதயநிதி கூறுகையில், 'அ.தி.மு.க., பொதுச்செயலராக பழனிசாமியே இருந்தால், தேர்தலில் எங்கள் பணி சுலபம்' என்றார்.

அப்படி என்றால், இருவரும் ஒன்றாக இருக்கின்றனர் என்பது தான் அர்த்தம். அரசு ஊழியர்களுக்காக தி.மு.க., அரசு வெளியிட்டிருப்பது தேர்தல் அறிவிப்பு. த.வெ.க.,வை பொறுத்தவரை, தெளிவாக, நிலையாக, நாளைய எதிர்காலத்தை நோக்கி பயணிக்கிறோம்.

இரு கட்சிகளும் வேண்டாம் புதிய முகம் வேண்டும் என்பது இளைஞர்கள், இளம்பெண்கள் எதிர்பார்ப்பாக உள்ளது. ஒவ்வொரு வீட்டிலும் விஜய்க்கு ஓட்டு போடுமாறு, பெற்றோரிடம் குழந்தைகள் கூறுகின்றனர்.

பொங்கலுக்குள், அ.தி.மு.க.,வில் இருந்து எத்தனை பேர், த.வெ.க.,வுக்கு வருகின்றனர் என்பதை பொறுத்திருந்து பாருங்கள். அ.ம.மு.க., பொதுச்செயலர் தினகரன், முன்னாள் முதல்வர் பன்னீர்செல்வம் ஆகியோர் சேருவர், அதாவது, த.வெ.க., கூட்டணியில் இடம் பெறுவர்.

உலக வரலாற்றில், மலேஷியாவில் நடந்த விஜயின் ஜனநாயகன் பட விழா புதிய இடம் பிடித்துள்ளது. மலேஷிய மண்ணில் 2 மணி நேரம் போக்குவரத்து நெரிசல் ஏற்படும் வகையில், ரோடு ஷோ நடந்தது. த.வெ.க., தலைவர் விஜயின் ஜனநாயகன் திரைப்படம், மக்கள் வியக்கும் அளவுக்கு இருக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

# "கடவுள் மனப்பான்மையில் பழனிசாமி வாழ்ந்து கொண்டிருக்கிறார்" : அமைச்சர் சிவசங்கர்

சென்னை: ஜன.6-

"எல்லாமே என்னால்தான் நடந்தது என்று நோய்க்கூறு சிலருக்கு உண்டு. அதில், பழனிசாமியும் சேர்ந்து கொண்டார். 'நான்தான் எல்லாம் செய்பவன்' என்ற 'God Complex' அதாவது கடவுள் மனப்பான்மையில் பழனிசாமி வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

55 ஆயிரம் மடிக்கணினிகளை மாணவர்களுக்கு வழங்காமல் வீணடித்த எடப்பாடி பழனிசாமி, லேப்டாப் பற்றி எல்லாம் பேசுவதற்கு அருகதை இருக்கிறதா?" என அமைச்சர் சிவசங்கர் விமர்சனம் செய்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "2021ல் சேலம் மாவட்டத்தில் உள்ள 11 இடங்களில் 10 இடங்களில் அதிமுக வெற்றி பெற்றது. இது அதிமுகவின் கோட்டை என்று எடப்பாடி பழனிசாமி பேசியிருக்கிறார். 2024 நாடாளுமன்றத் தேர்தலில் 39 தொகுதிகளை திமுக கூட்டணி கைப்பற்றியது.

அந்த 39 நாடாளுமன்றத் தொகுதிகளில் அடங்கியிருக்கும் 234 சட்டமன்றத் தொகுதிகளில் 221 தொகுதிகளில் திமுக கூட்டணி முதலிடம் பெற்றது பழனிசாமிக்கு தெரியாதா? அதிமுகவின் கோட்டையான சேலத்திலேயே 2024 நாடாளுமன்றத் தேர்தலில் ஓட்டை விழுந்ததை எல்லாம் மறந்துவிட்டாரா?

55 ஆயிரம் மடிக்கணினிகளை மாணவர்களுக்கு வழங்காமல் வீணடித்த எடப்பாடி பழனிசாமி, லேப்டாப் பற்றி எல்லாம் பேசுவதற்கு அருகதை இருக்கிறதா? 20 லட்சம் கல்லூரி மாணாக்கருக்கு லேப்டாப் வழங்கும் 'உலகம் உங்கள் கையில்' திட்டத்தை முதலமைச்சர் இன்று தொடங்கி வைக்கிறார். தொழில்நுட்ப அறிவியலை வலுப்படுத்த Dell, Acer, HP போன்ற உலகத் தரமான நிறுவனங்களின் மடிக்கணினிகள் வழங்கப்படுகின்றன.

மாணவர்களுக்கு வழங்கப்படும். இந்த மடிக்கணினிகளில் Intel i3 / AMD Ryzen 3 Processor, 8 GB RAM, 256 GB SSD, Windows 11 Home Strategic BOSS Linux OS ஆகிய மென்பொருள்கள் முன்னதாக நிறுவப்பட்டுள்ள நிலையில், நடைமுறையில் உள்ள கல்வி மற்றும் திட்டப் பணிகளுக்காக MS Office 365, மேலும் செயற்கை நுண்ணறிவு மென்பொருளான Perplexity Pro-வின் ஆறு மாத சந்தாவும் கட்டணமில்லாமல் வழங்கப்படுகிறது. தமிழ்நாட்டு மாணவர்கள் உலகத்தோடு போட்டியிடும் வகையில் ஒவ்வொரு திட்டமாக வகுத்து வருகிறது திமுக அரசு.

மகளிர், அரசு ஊழியர், மாணாக்கர் என ஒவ்வொரு பிரிவினரும் முதல்வரின் திட்டங்களால் பயன்பெறுவதைப் பார்த்து பொறுத்துக் கொள்ள முடியாமல் குமைகிறார் பழனிசாமி.

டீ கடையில் இரண்டு பேப்பர் படிக்கும் போது அதில் உள்ள செய்திகளில் தனக்கு எல்லாம் தெரிந்தவர் போல வடிவேலு தலையிட்டு உதார் விடுவார். அப்படிதான் திராவிட மாடல் அரசின் திட்டங்கள் எல்லாம் தன்னால்தான் வந்தது என பழனிசாமி நடிக்க வேண்டியிருக்கிறது.

மகளிர் உரிமைத் தொகை, லேப்டாப், போன்றவற்றை அதிமுக குரல் கொடுத்ததால்தான் திமுக அரசு கொண்டு வந்தது என பழனிசாமி சொல்லிக் கொள்ளும் வரிசையில் இப்போது பொங்கல் பரிசுத் தொகுப்பிலும் பழனிசாமி தலையை நுழைத்திருக்கிறார். அடுத்து நாம் ஓர் திட்டம் கொண்டு வர முடிவு செய்தாலே, உடனே முந்திக் கொண்டு அதற்கு ஒரு கருத்தைச் சொல்லி, அது தன்னால்தான் வந்தது எனப் பெருமைப்பட்டு அரசியல் செய்வது எல்லாம் எதிர்க கட்சித் தலைவர் செய்யும் செயலா?

"எல்லாமே என்னால்தான் நடந்தது" என்று ஒரு Mindset போபியா சிலருக்கு உண்டு. அதில், பழனிசாமியும் சேர்ந்து கொண்டார். "நான்தான் எல்லாம் செய்பவன்" என்ற 'God Complex' அதாவது கடவுள் மனப்பான்மையில் பழனிசாமி வாழ்ந்து கொண்டிருக்கிறார். நம்முடைய திட்டங்கள் மக்களிடம் ஏற்பட்டிருக்கும் ஆதரவை எதிர்க்கட்சித் தலைவரே உணர்ந்ததால்தான் இப்படியெல்லாம் பேசி வருகிறார்.

பழனிசாமி அரசியல் செய்வதற்கும் நம்முடைய சாதனை திட்டங்கள் காரணமாக அமைந்திருக்கிறது. Election Eyewashக்காக லேப்டாப் கொடுகிறார் என சொல்கிறார் பழனிசாமி. அவருடைய God Complex-ஐ என்ன சொல்ல?

சேலத்தில் எடப்பாடி பழனிசாமி பேசிக் கொண்டிருந்த அதே நேரத்தில்தான் புதுக்கோட்டையில் உரையாற்றி கொண்டிருந்த ஒன்றிய அமைச்சர் அமித்ஷா, "ஏப்ரலில் தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சி மலரும். பிரதமர் மோடியின் தலைமையின் கீழ் வளர்ச்சி பாதையில் பங்கேற்போம்" என்றார்.

'கூட்டணி ஆட்சி' என ஆட்சியில் பங்கு என்றதோடு பழனிசாமியின் பெயரைக்கூட அமித் ஷா உச்சரிக்கவில்லை. "கூட்டணிக்கு தலைமை எடப்பாடி பழனிசாமிதான்" என அடிமைகள் வீராவேசம் காட்டினாலும் எஜமானர் அமித் ஷா, பழனிசாமி பெயரைக்கூட சொல்ல மறுக்கிறார்.

'கூட்டணிக்கு தலைமை' என்ற பதவியிலேயே தடுமாறிக் கொண்டிருக்கும் பழனிசாமிதான் 'முதல்வர் பதவி'க்கு வரப் போகிறாரா?. "இந்த அவமானம் உனக்கு தேவையா?" என்ற நடிகர் வடிவேலுவின் காமெடிக்கு பொருத்தமான கேரக்டர் பழனிசாமிதான். அவமானங்களை தாங்கி கொள்வது ஆயக்கலைகளிலும் அடக்காத ஒன்றுதான் போல" என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# மோடி நல்லவர்; நான் மகிழ்ச்சியுடன் இல்லை என்பது அவருக்கு தெரியும்: சொல்கிறார் அதிபர் டிரம்ப்

வாஷிங்டன், ஜன.6-

''பிரதமர் மோடி மிகச்சிறந்த மனிதர், ஒரு நல்ல மனிதர். நான் மகிழ்ச்சியாக இல்லை என்பது அவருக்கு தெரியும்,'' என அமெரிக்க அதிபர் டிரம்ப் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அதிபர் டிரம்ப் கூறியதாவது: இந்தியா என்னை மகிழ்ச்சி அடைய செய்ய விரும்பியது. மோடி மிகவும் நல்லவர். நான் மகிழ்ச்சியாக இல்லை என்பது அவருக்கு தெரியும். என்னை மகிழ்ச்சியடைய செய்வது முக்கியம். ரஷ்யாவின் கச்சா எண்ணெய் விலையை விட இந்தியா மீதான வரிகளை எங்களால் உயர்த்த முடியும்.

பிரதமர் மோடி மிகச்சிறந்த மனிதர். அவர் நல்லவர். ரஷ்யாவுடன் இந்தியா வர்த்தகம் செய்கிறது. ரஷ்ய பொருளாதாரம் மிகவும் மோசமாக உள்ளது. ஆனால் உண்மையில் மோசமாக இருப்பது வெனிசுலா பொருளாதாரம். நான் இதுவரை பார்த்ததிலேயே மோசமான பொருளாதாரம் என்று நான் நினைக்கிறேன்.

ரஷ்ய ட்ரோன் கதை பொய்!

சமீபத்தில் ரஷ்யாவின் வடமேற்கு நோவ்கோரோட் பகுதியில் உள்ள ரஷ்ய அதிபர் புடினின் வீட்டை உக்ரைன் தாக்க முயன்றதாக ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ் கூறி இருந்தார்.

புடினின் வீட்டை குறி வைத்த அனைத்து ட்ரோன்களும் சுட்டு வீழ்த்தப்பட்டது. யாருக்கும் காயம் ஏற்படவில்லை என ரஷ்ய ராணுவம் கூறியிருந்தது. இந்த குற்றச்சாட்டு முற்றிலும் பொய் என உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி திட்டவட்டமாக மறுத்து இருந்தார்.

தற்போது உக்ரைன் புடினின் வீட்டை ட்ரோன் தாக்குதலில் குறிவைத்ததாக ரஷ்யாவின் கூற்றை அதிபர் டிரம்ப் நிராகரித்தார். இது குறித்து அதிபர் டிரம்ப் கூறுகையில், ''ரஷ்ய ட்ரோன் கதை பொய். ரஷ்ய அதிபர் புடின் வீட்டின் மீது உக்ரைன் ட்ரோன் தாக்குதலை நடத்தவில்லை என்று அமெரிக்க தேசிய பாதுகாப்பு அதிகாரிகள் முடிவு செய்துவிட்டனர்'' என்றார்



# லேயில் கடும் பனிப்பொழிவு; விமான சேவைகள் தற்காலிக ரத்து

லடாக், ஜன.6-

லடாக்கில் நிலவி வரும் கடுமையான கடுமையான பனிப்பொழிவு காரணமாக, லே விமான நிலையத்தில் விமான சேவைகள் தற்காலிகமாக ரத்து செய்யப்பட்டுள்ளன. இதனால், சுற்றுலாப் பயணிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்திய வானிலை ஆய்வு மையத்தின் அறிக்கையின்படி, லேயில் 9.6 டிகிரி செல்சியஸ் குறைந்தபட்ச வெப்பநிலை பதிவாகியுள்ளது. கடந்த 24 மணி நேரத்தில் 0.6 சென்டி மீட்டர் பனிப்பொழிவு நிலவியுள்ளது. இதனால், லேயில் உள்ள சுற்றுலாப் பகுதிகள் வெள்ளைப்போர்வையால் மூடப்பட்டது போல காட்சியளிக்கின்றன.

கடும் பனிப்பொழிவு காரணமாக லே விமான நிலையத்தில் அனைத்து விமானங்களின் சேவைகளும் தற்காலிகமாக ரத்து செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து இண்டிகோ நிறுவனம் வெளியிட்ட அறிக்கையில், 'லேவில் நிலவும் பனிப்பொழிவு காரணமாக, விமானச்சேவைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன. இதனால், காத்திருப்பு நேரம் அதிகரிக்கலாம். வானிலையை நாங்கள் உன்னிப்பாக கவனித்துக்கொண்டிருக்கிறோம். இயல்புநிலை திரும்பியவுடன் மீண்டும், சேவைகள் தொடரும். விமான நிலையத்திற்கு வருவதற்கு முன்பாக, பயணிகள் தங்கள் விமானங்களின் நிலைகளை இணையதளங்கள் மூலம் அறிந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்,' என தெரிவித்துள்ளது.

# விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சோழவந்தான் தொகுதி புதிய மாவட்ட செயலாளர் தமிழாளன் அம்பேத்கர் சிலைக்கு மரியாதை

அலங்காநல்லூர்.

ஜன.06-

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே உள்ள பெரியஊர்சேரி கிராமத்தில் அமைந்துள்ள புரட்சியாளர் அம்பேத்கர் அவர்களின்

திருஉருவசிலைக்கு விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல் திருமாவளவன் அவர்கள் அறிவித்த சோழவந்தான் தொகுதி புதிய மாவட்டசெயலாளர் தமிழாளன், மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். முன்னதாக பெரியஊர்சேரி பிரிவிலிருந்து கட்சி நிர்வாகிகளுடன் ஐந்துக்கும் மேற்பட்ட கார்களில் சிலை அமைந்துள்ள பகுதிக்கு வருகை தந்தார் தொடர்ந்து



நிர்வாகிகள் அவரை வரவேற்றனர் பின்னர் சிலைக்கு ஆளுயர மாலை அணிவித்து மரியாதை செலுத்தி வணங்கினார். தொடர்ந்து கட்சி நிர்வாகிகள் ஒருவரின் பின் ஒருவராக கைத்தறி ஆடை அணிவித்து புதிய மாவட்ட செயலாளருக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டனர். அதனைத் தொடர்ந்து கேட்டுகடை பகுதியில் அமைந்துள்ள ஐயா தொல்காப்பியர் நினைவு ஆட்டோ நிலையம் சார்பில் கேக் வெட்டி கொண்டாடப்பட்டது.இதில் நிர்வாகிகள் முன்னால் மண்டல செயலாளர் கலைவாணன், மாநில துணை செயலாளர் அழகுமலை, தொகுதி துணை செயலாளர் தென்னவன், மாவட்ட அமைப்பாளர்கள்அதிவீரபாண்டியன், காமராசு, அன்பழகன், வடகல்பூமி, ஒன்றிய செயலாளர்கள் தமிழ்நிலவன், பாலவளவன், வாடிப்பட்டி அரசு, , வளவன், முத்துகிருஷ்ணன், சக்திவேல் பாண்டியன், லெட்சுமணன், அருள்மொழியன், கடல்கேசன், ராஜாராம்,பதினெட்டாம்படி, தமிழ்குமரன், ராமகிருஷ்ணன், காளிமுத்து, தனம், திருமாவாசு, கருப்புச்சாமி, முடக்காத்த ான் சரவணன், தமிழ்அழகன், பொன்வெற்றி, கோபிநாத், இளங்கோவன் ராமர், மகளி ரணி காமாயி, தன்மானச்செல்வி, மல்லிகா, நாகலட்சுமி, உள்பட மாநில, மாவட்ட, ஒன்றிய, கிளை முகாம் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்..

## திருப்பூர் சந்திரகாவி மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் ரூ.1.59 கோடி மதிப்பீட்டில் புதிய வகுப்பறைகள் மேயர் திறந்து வைத்தார்



அனுப்பர்பாளையம், ஜன.6-

திருப்பூர் சந்திரா காவி மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் ரூ.1கோடியே 59 லட்சத்து 60 ஆயிரம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட 8 புதிய வகுப்பறைகள் திறப்பு விழா, பள்ளி வளாகத்தில் இன்று காலை நடந்தது. மாநகராட்சி 28வது வார்டு கவுன்சிலர் சேகர் தலைமை தாங்கினார். கல்வி குழுத் தலைவர் திவாகர் முன்னிலை வகித்தார்.பள்ளி தலைமை ஆசிரியை ஞானாம்பாள் வரவேற்று பேசினார். மாவட்ட கல்வி அலுவலர் (தொடக்கக்கல்வி) சித்ரா, வட்டார கல்வி அலுவலர் சியாமளா, வட்டார கல்வி அலுவலர் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்டனர். இதில் சிறப்பு அழைப்பாளராக கலந்துகொண்டு மேயர் தினேஷ்குமார் புதிய வகுப்பறைகளை ரிப்பன் வெட்டி திறந்து வைத்து சிறப்புரையாற்றினார். நிறைவில், பட்டதாரி ஆசிரியர் சிவராஜ் நன்றி கூறினார். இந்நிகழ்ச்சியில், தொழிலதிபர் கந்தசாமி, ஆசிரியர்கள், முன்னாள் மாணவர்கள் மற்றும் பள்ளி மாணவ, மாணவியர் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## கோகைன் கடத்தல்; நைஜீரியாவில் இந்திய கப்பல் மாலுமிகள் 22 பேர் கைது



அபுஜா, ஜன.6-

சட்டவிரோதமாக 31.5 கிலோ கோகைன் போதைப் பொருளை கடத்தியதாக இந்திய கப்பல் மாலுமிகள் 22 பேரை நைஜீரியா அரசு அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.ஐரோப்பிய மற்றும் பிற ஆப்ரிக்க நாடுகளுக்கு போதைப்பொருள் கடத்தல்மற்றும் உற்பத்தி மையமாகநைஜீரியா இருந்துவருகிறது. இதனைக் கட்டுப்படுத்த நைஜீரியா அரசும் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.கடந்த ஜனவரி 2ம் தேதி மார்ஷல் தீவுகளில் இருந்து சென்ற எம்வி அருணா ஹூலியா என்ற இந்தியக் கப்பல் லாகோஸ் துறைமுகத்திற்கு வந்தது. அந்தக் கப்பலில் போதைப் பொருள் தடுப்பு பிரிவு அதிகாரிகள் சோதனை நடத்தினர். அப்போது, 31.5 கிலோ எடையுள்ள கோகைன் கடத்தி வரப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டது. இதையடுத்து, அந்தக் கப்பல் மாலுமிகள் 22 பேர் கைது செய்யப்பட்டனர்.ஆண்டு நவம்பர் மாதம் பிரேசிலில் இருந்து லாகோஸ் துறைமுகத்திற்கு 20 கிலோ கோகைன் கடத்தி வந்த 20 பேர் கைது செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது

## கேரளா சபரிமலை பந்தள மன்னர் சசிக்குமார் வர்மா குருபூஜை விழா உடுமலை ஸ்ரீ சபரிமலை சபரி பாட்டி உழவாரப்பணி பேரவை ஏற்பாடு




உடுமலை, ஜன. 6-

திருப்பூர் மாவட்டம், உடுமலை ஸ்ரீ சபரிமலை சபரி பாட்டி உழவாரப்பணி பேரவை ஏற்பாட்டில் உடுமலை ராமசாமி நகர் கிழக்கு, சிவசங்கரி லே அவுட்டில் பந்தள மகாராஜா சசிக்குமார் வர்மா குரு பூஜை விழா, கோமாதா பூஜை, திருவிளக்கு பூஜை, 18 ஆம் படி பூஜை, மற்றும் ஐயப்ப பக்தர்கள் குடும்ப விழா நடந்தது. விழாவிற்கு ஸ்ரீ சபரிமலை சபரி பாட்டி உழவாரப் பணி பேரவையின் மாநிலத் தலைவர் எம்.ராஜேந்திரன் குருசாமி தலைமை தாங்கினார். விழாவில் கேரள மாநில சபரிமலை ஐயப்ப சேவா சமாஜம் மாநிலத் தலைவரும், 2026 வருட சபரிமலை திருவாபரணம் ஊர்வல அரசு பிரதிநிதியுமான, பந்தள மன்னர் பி.என். நாராயணவர்மா சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். உடுமலை நகரமன்ற உறுப்பினர் எஸ்.சௌந்தர்ராஜன், மீன் கடை பி.அற்புதராஜ் ஆகியோர் வரவேற்றனர். நூற்றுக்கும் மேற்பட்ட குருசாமிகள் முன்னிலை வகித்தனர். விழாவில் எஸ்.எஸ்.யு.பி. பேரவையின் கொடி ஏற்றப்பட்டது. பின்னர், பந்தளமன்னர் சசிக்குமார் வர்மா குரு பூஜையை யொட்டி அவரது படத்திற்கு மாலை அணிவித்து, தீபம்மேற்றி, மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து கோமாதா பூஜை, திருவிளக்கு பூஜை, 18 ஆம் படி பூஜை நடைபெற்றது. இவ்விழாவில் ஐயப்ப பக்தர்கள் ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர். விழாவில் சபரிமலை பந்தள மன்னர் பி.என். நாராயணவர்மா பேசுகையில்: சபரிமலையின் ஆகம விதிமுறைகளையும், பாரம்பரியத்தையும், ஆச்சார, அனுஷாகளையும், 48 நாள் விரத முறைகளையும், நீங்களும் நானும் ஒரே கடவுள் என்கிற தத்துவமசி போதத்தையும் ஐயப்ப பக்தர்கள் தவறாமல் கடைபிடிக்க வேண்டும். என்றார். மேலும் அனைத்து ஐயப்ப பக்தர்களும் குடும்பத்தோடு அரண்மனைக்கு வர வேண்டும். என அழைப்பு விடுத்தார். விழாவில் கலந்துகொண்ட அனைத்து ஐயப்ப பக்தர்கள் மற்றும் பெண்கள், தாய்மார்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. விழா முடிவில் எஸ்.எஸ்.யு.பி. கிளை செயலாளர் காளிமுத்துக்குமார் நன்றி கூறினார்.



■ மதுரை அலங்காநல்லூர் கேட்டுகடையில் அய்யா தொல்காப்பியர் நினைவு ஆட்டோ சங்கம் சார்பில் புதிதாக பொறுப்பேற்ற விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சோழவந்தான் தொகுதி மாவட்ட செயலாளர் தமிழாளன் கலந்து கொண்டு கேக் வெட்டி ஆட்டோ சங்க நிர்வாகிகளுக்கு வழங்கினார். முன்னதாக அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இதில் ஐயா தொல்காப்பியர் நினைவு ஆட்டோ சங்க நிர்வாகிகள் மற்றும் விடுதலை சிறுத்தைகள் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000